# மாந்தை சோல்ட் லிமிட்டெட்

# MANTHAI SALT LIMITED

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

அரசுக்குச் சொந்தமான கம்பனி

# ஆண்டறிக்கையும் கணக்குகளும்

# ANNUAL REPORT & ACCOUNTS

## 2015.04.01 – 2016.03.31

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. தலைவரின் கண்ணோட்டம் | 01 |
| 2. பொது முகாமையாளரிடமிருந்தான செய்தி | 02 |
| 3. நிறுவனம் பற்றிய தகவல்கள் | 04 |
| 4. அறிமுகம் | 05 |
| 4.1 கம்பனி பற்றிய அறிமுகம் | 05 |
| 4.2 உற்பத்திப் பகுதிகள் பற்றிய விபரங்கள் | 06 |
| 4.3 உற்பத்தி தொடர்பான விபரங்கள் | 07 |
| 4.4 விற்பனைகள் | 07 |
| 5. அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய அடிப்படைப் பகுதிகள் | 08 |
| 5.1 இத்தகைய அபிவிருத்தி செயற்பாடுகள் மூலமாக பெறப்பட்ட குறிப்பிடத்தக்க வெளியீடுகள் | 09 |
| 6. நிதிசார் வெளிப்படுத்தல்கள் | 10 |
| 7. அடிப்படை முகாமைத்துவ பதவியினர் பற்றிய விபரம் | 11 |
| 8. நிறுவனம்சார் கட்டமைப்பு | 12 |
| 8.1 மாந்தை சோல்ட் லிமிட்டெடில் தற்போதுள்ள பதவியினர் | 13 |
| 9. பணிப்பாளரின் அறிக்கை | 14 |
| 10. பங்குதார்களுக்கான சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை | 17 |
| 11. கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் 2015/2016 | 20 |

# 1. தலைவரின் கண்ணோட்டம்

மாந்தை சோல்ட் லிமிறெற் நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில், இந்த கம்பனியின் 2015 / 2016 ஆண்டுக்கான வருடாந்த பொதுக் கூட்டத்துக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். அத்துடன் 2016 மார்ச் 31 ஆம் மாதத்துடன் நிறைவடையும் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகளையும் முன்னிலைப்படுத்துகிறேன்.

மீளாய்வாண்டு காலப்பகுதியின் கீழ், மாந்தை சோல்ட் லிமிறெற் நிறுவனம் வரி மதிப்பீட்டுக்குப் முன்னர் ரூபா. 62,370,254/= புரள்வினை அடையப் பெற்று இலாபமாக ரூபா. 807,778/= தொகையினை ஈட்டியுள்ளது. எமது ஆரம்ப கால அடைவு மட்டங்கள் தொடர்பாக பின்னோக்கிப் பார்க்கும் போது எமது உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கையின் அடைவுகள் பெருமைப்படத்தக்களவு முன்னேற்றமடைந்துள்ளதனை உணர்ந்து கொள்ள முடியும். அத்துடன் அரசாங்கத்துக்கான வரிப்பணமாக ரூபா 532,349/= தொகையை செலுத்தியுள்ளது.

இலங்கையின் உப்பு உற்பத்தித் துறையினை நிலையாகப் பேணுவதிலும் அபிவிருத்தி செய்வதிலும் இக்கம்பனி அனுசரணையாளராக செயற்பட்டு உதவி புரிந்துள்ளது என்பதனைப் பங்குதாரர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியப்படுத்துகின்றேன். 2015/2016 ஆண்டு காலப்பகுதியில் பெறப்பட்ட அடைவுகளின் முடிவின் பிரகாரம் பங்கொன்றிற்கான வருமானம் ரூபா 1. ஆக இருந்தது.

இவ்வருடத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஆளணி 104 ஆக இருந்தது. 31.03.2016 அன்று இங்கு இருக்கும் ஆளணி 46 ஆகும். எனவே அனைத்து மட்டங்களிலுமுள்ள ஊழியர்கள் அனைவரிடமிருந்தும் நாம் பூரண ஒத்துழைப்பினைப் பெற்று வருகின்றோம்.

மாந்தை சோல்ட் லிமிறெற் நிறுவனம் எதிர்பார்க்கப்படும் இலக்கினை வெற்றிகரமாக நிறைவேற்றும் வகையில் புதிய நியாயமானதொரு மூலதனத்தினை உட்செலுத்துவதன் ஊடாக தற்போதைய மூலதனத் தளத்தினை வலுப்படுத்துவதற்கான தேவை காணப்படுகின்றது.

தொடர்ந்தும் எங்களை ஊக்குவித்து ஆதரவளித்துவரும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு, அரச தொழில் முயற்சிகள் திணைக்களம், நிதி அமைச்சு, அரச அதிகாரிகள் அதேபோன்று வாடிக்கையாளர்கள் அனைத்து தரப்பினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

மாந்தை சோல்ட் லிமிறெற் இதுவரையில் சந்திக்காத எல்லா சவால்களுக்கும் முகம் கொடுத்து எமது வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு பயனுறுதி வாய்ந்த தீர்வினை விரைவாகப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் எமது வெற்றியினை உறுதிப்படுத்துகிறோம்.

இக்கம்பனியின் தொடர்ந்தேர்ச்சையான வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் செயற்பாட்டுத் திட்டமொன்றினை நாம் தயாரித்துள்ளோம்.

இவ்வாண்டு காலப்பகுதியில் கம்பனியின் சகல உத்தியோகஸ்தர்கள் ஊழியர்கள் அனைவரினாலும் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கும் தயவான ஒத்துழைப்பிற்கும் நான் உண்மையாக எனது நன்றியை அர்ப்பணிக்கிறேன்.

**திரு. எம்.எம். அமீன்**
**தலைவர்.**

# 2. பொது முகாமையாளரின் உரை

மாந்தை சோல்ட் லிமிற்றெட் நிறுவனம் 2015 ஏப்ரல் 31 ஆம் திகதியிலிருந்து 2016 மார்ச் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அது அடைந்து கொண்ட இலாபங்கள், முன்னேற்றகரமான பணிகள் மற்றும் அதன் அடைவுகள் என்பவற்றினை வெளியிடும் இந்த வருடாந்த பொதுக் கூட்ட நிகழ்வில் எனது செய்தியை சொல்ல கிடைத்தமை ஒரு மகத்தான சந்தர்ப்பமாகும்.

வடக்கில் மாந்தை சோல்ட் லிமிற்றெட் நிறுவனத்தின் கீழ் பல உப்பளங்கள் ஒன்று சேர்ந்துள்ள போதிலும், இந்த நடப்பு நிதியாண்டிலே பல்வேறுபட்ட காரணங்களினால் மன்னார் உப்பளத்தினை மாத்திரமே தொழிற்படுத்த முடியுமாகயிருந்தது. அதேவேளை ஆனையிறவு உப்பள நிர்வாகமானது 2015 ஜனவரி 15 ஆம் திகதிய 1897/15 ஆம் இலக்க விஷேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைவாக மீண்டும் 2015 பெப்ரவரி மாதத்திலிருந்து மாந்தை சோல்ட் லிமிற்றெட் நிறுவனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

குறித்த இந்த நிதியாண்டு காலப்பகுதியில், உத்தேச கொள்ளளவான 5500 மெற்றிக் தொன் உப்பு உற்பத்திக்கு மாற்றமாக 3320 மெற்றிக் தொன் உப்பு உற்பத்தியினையே எமது குழுவினரால் மேற்கொள்ள முடியுமாகயிருந்தது. இக்காலப்பகுதியில் நிலவிய சாதகமற்ற காலநிலையே இதற்குக் காரணமாக அமைந்தது. சாதாரண உப்பாகவும், அயடீன் கலந்த 1கி. கி பக்கட் அளவு உப்பாகவும், வர்த்தக ரீதியான உப்பாகவும் மற்றும் அரைத்த உப்பாகவும் 5063 மெற்றிக் தொன் உப்பு விற்பனை செய்யப்பட்டது. ஆண்டுக்கான மொத்த தேறிய விற்பனைப் புரள்வு ரூபா 62.3 மில்லியனாகும். இவ்வாண்டில் வரிக்கு முந்திய இலாபம் ரூபா 807,778/= ஆகும்.

இந்த கம்பனி நியாயமான விலைகளில் உப்பினை விற்பனை செய்ததன் மூலம் தனது வாடிக்கையாளர்களுக்கும் நுகர்வோருக்கும் சிறந்த சேவையினை வழங்கியுள்ளமை மாத்திரமன்றி, திறைசேரிக்கான நியாயமான பங்கிலாபத் தொகை உள்ளடங்கலாக அரசாங்கத்திற்கான வருமான வரியாக ரூபா 532,34,9/= தொகையினையும் செலுத்தியுள்ளது என்பதனைத் தெரிவிப்பதில் பெருமையடைகின்றோம்.

இக்காலப்பகுதியில் ஆனையிறவு உப்பளத்திற்கான புனர் நிர்மாண வேலைத்திட்டத்தின் 1 ஆம் கட்டப் பணிகள் கிட்டத்தட்ட 95% சதவீதம் பூர்த்தியடைந்துள்ளன. 2015 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஆனையிறவு உப்பளத்துக்கு ரூபா 5 மில்லியன் நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றதனால் எஞ்சியிருந்த பல வேலைகளை இதன் மூலம் பூர்த்தி செய்ய முடியுமாகயிருந்தது. இந்த உப்பளத்தின் மூலம் அதிகபட்ச பலாபலன்களை அடைந்து கொள்ளும் பொருட்டு இதனை வினைத்திறன் மற்றும் செயற்றிறன் மிக்க வகையில் செயற்படுத்துவதற்காக இந்த சபையும் அதன் முகாமைத்துவமும் இணைந்து சிறந்த மூலோபாயத் திட்டத்தினை வகுத்துள்ளது. இந்த உப்பளத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் 2016 ஜனவரி மாத ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் இதன் மூலம் இதன் முதலாவது ஆண்டில் 6000 மெற்றிக் தொன் விளைச்சல் எதிர்பார்க்கப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டளவில் சந்தைப் பங்கில் 20% சதவீதத்தினைப் பகிர்வதன் மூலம் இலங்கையின் முக்கிய உப்பு உற்பத்தியாளராக மாந்தை சோல்ட் லிமிற்றெட் நிறுவனம் திகழ வேண்டும் என்ற இலக்கினை இந்த முகைாமைத்துவம் நிர்ணயித்துள்ளது.

இந்த நிதியாண்டில் இந்நிறுவனத்தின் ஊழியர்கள் இலக்கினை அடைந்து கொள்வதற்கான பயிற்சி, உட்சாகப்படுத்தல்கள், தேவையான அடிப்படை வசதிகளை வழங்குதல், போனஸ் கொடுப்பனவுகள் மற்றும் இதுபோன்ற பல்வேறு வித்தியாசமான வேலைத் திட்டங்களின் ஊடாக வலுவூட்டப்பட்டுள்ளனர்.

நிறைவாக, இந்த கம்பனியின் உயர்ச்சிக்காக உளப்பூர்வமான முறையில் தங்களது பங்களிப்புக்களை நல்கிய கௌரவ கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர், அதன் செயலாளர், இக்கம்பனியின் தலைவர், பணிப்பாளர் சபை மற்றும் என்னுடைய ஊழியர் குழாத்தினர் அனைவருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட முறையில் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**திரு. ஏம்.ஜே. துவான் மன்ஸில்**
**பொது முகாமையாளர்**

# 3. நிறுவனம் பற்றிய தகவல்கள்

| | |
|---|---|
| **கம்பனியின் பெயர்** | மாந்தை சோல்ட் லிமிட்டெட்<br>(அரசங்கத்திற்கு சொந்தமான கம்பனி) |
| **நிரல் அமைச்சு** | கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு. |
| **தலைமைக் காரியாலயம்** | இல. 561/3, எல்வித்திகல மாவத்தை, கொழும்பு 05. |
| **மன்னார் உப்பளம்** | பெரிய கடை, மன்னார். |
| **ஆனையிறவு உப்பளம்** | ஏ 9 வீதி, ஆனையிறவு, கிளிநோச்சி |
| **கம்பனியின் பதிவு இல.** | [என் (பீ பி எஸ்) 942], புதிய இல. பீபி 1078 |
| **வரி செலுத்துபவர்களுக்கான அடையாள இலக்கம் (TIN இல.)** | 134009420 |
| **பங்குதாரர்கள்** | பொது திறை சேரி |
| **பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்** | திரு. எம்.எம். அமீன் (தலைவர்) (2015.04.02 இலிருந்து)<br>திரு. ஏ.கே.எம். சிஹாப்டீன் (தொழிற்பாட்டுப் பணிப்பாளர்) (2015.04.02 - 2016.05.30)<br>திரு. பி.என்.யூ.பி. விஜேரத்ன (நிறைவேற்றுப் பணிப்பாளர்) (2015.06.01 - 2015.10.15)<br>திரு. கே. விஜிந்தன் (நிறைவேற்றுப் பணிப்பாளர்) (2015.03.13 - 2016.03.31)<br>திரு.பி.ஏ.எஸ்.ஏ. குமார (நிதி பணிப்பாளர்) (2015.03.01 இலிருந்து)<br>திரு. ஜே. மார்சலுஸ் பீரிஸ் (2015.04.02 இலிருந்து)<br>திரு. எம்.எம்.எம். உவைஸ் (2015.04.02 இலிருந்து)<br>திரு. எஸ். ஜயரத்ன (2015.06.19 இலிருந்து)<br>டாக்டர். எஸ். செல்வ மஹேந்திரன் (2015.04.27 இலிருந்து) |
| **அவதானிப்பாளர்** | திருமதி. டபிள்யூ.ஏ.பீ. வெள்ளப்புலி (கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு) (2015.12.29 – 2016.01.30) |
| | திரு. ஆர்.எஸ்.கே. தூல்வலகே (கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு) (2015.03.10 – 2015.12.28) |
| **ஆலோசகர்** | திரு. ரோய் ஜயசிங்க (கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு) |
| **சபைச் செயலாளர்** | கோப்பரேற் அவ்யாஸ் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் |
| **கணக்காய்வாளர்** | கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம், இலங்கை |
| **வங்கியாளர்** | இலங்கை வங்கி |

# 4. அறிமுகம்

## 4.1 கம்பனி பற்றிய அறிமுகம்

மாந்தை உப்புக் கம்பனி, இலங்கை வரலாற்றில் மிக நீண்டகாலமாக உப்பு உற்பத்தில் ஈடுபட்டுவருகின்றது. இது சாதாரண உப்பு, அயடின் கலந்த உப்பு, தூளாக்கிய உப்பு மற்றும் கைத்தொழில் ரீதியிலான உப்பு வகைகள் என்பவற்றினை உற்பத்தி செய்து வருகின்றது. பிரதான உப்பு உற்பத்தி மன்னார் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அதன் தலைமைக் காரியாலயம் கொழும்பு நகரில் அமைந்துள்ளது. ஆனையிறவு உப்பளம் மீண்டும் இந்த கம்பனியின் நிருவாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. அத்துடன் இதன் உற்பத்தி நடவடிக்கைகள் 2016 ஜனவரி மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த உப்புக் கம்பனி 1938 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இது பல்வேறுபட்ட நிர்வாக முறைகளின் கீழ் கட்டுப்படுத்தப்பட்டு வந்துள்ளதுடன், இறுதியாக 2001 ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்ட மாந்தை உப்பு கம்பனி எனப் பெயரிடப்பட்டு தற்போது கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்றது. இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஏனைய உப்புகளுடன் ஒப்பிடுகையில் மிகச்சிறந்த உப்பாக (97.% சதவீதம் சோடியம் குளோரைட்) அங்கீகரிக்கப்படுகின்றது.

மாந்தை உப்புக் கம்பனி தேசிய இயற்கை வள பயன்பாட்டு மத்தியநிலையமாக மாத்திரமன்றி மன்னார் மாவட்டத்தில் வாழும் எண்ணற்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழில் வாய்ப்பினையும் வழங்குகின்றது. தற்போது இங்கு 42 நிரந்தரமான உத்தியோகத்தர்களும் 90 பருவகால அடிப்படையிலான ஊழியர்களும் பணிபுரிகின்றனர்.

வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி திறைசேரி மற்றும் ஏனைய திணைக்களங்களினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட சபையினால் நிர்வகிக்கப்படுவதுடன், இது கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. இந்த அமைச்சின் கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்டப் பிரிவினால் கண்காணிக்கப்படுவதுடன், சட்ட மற்றும் பொறுப்பு விடயங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இது ஒரு அரச தொழில்முயற்சியாண்மையாக 2007 ஆம் ஆண்டடின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், கம்பனி ஒழுங்கு விதிகளையும் பின்பற்றுகின்றது. தற்போது, இந்நிறுவனம் இலங்கை நியமங்கள் நிறுவனத்தினால் தரம் உறுதிப்படுத்தப்பட்டு சான்றுபடுத்தப்பட்டுள்ளது. அத்துடன், 2015 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்க கணக்காய்வாளர்களினால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**வரலாற்றுக் கண்ணோட்டம்**

| ஆண்டு | | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|
| இருந்து | வரை | |
| 1938 | 1965 | உப்பு திணைக்களம் |
| 1966 | 1990 | இலங்கை தேசிய உப்பு கூட்டுத்தாபனம் |
| 1991 | 1996 | லங்கா சோல்ட் லிமிட்டெட். |
| 1997 | 2001/ செப்ரெம்பர் | மன்னார் அரசாங்க அதிபருக்கு கீழ் இயங்கிய மன்னார் உப்பளம் |
| 2001/ஒக்டேபர் | இன்று வரை | மாந்தை சோல்ட் லிமிட்டெட். (வடக்கு மாகாண உப்பளங்கள்) |

## எங்களது தொலை நோக்கு

"இரசாயன மற்றும் ஏனைய படிமுறைகளுடன் இணைந்துள்ள இயற்கை வளங்களை ஆராய்வதன் மூலம் வடக்கு மாகணத்தில் காணப்படும் உப்பினை அடிப்படையாகக் கொண்ட தொழில் முயற்சியை அபிவிருத்தி செய்வதுடன் அதனால் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்".

## பணிக்கூற்று

"உப்பளங்களை இயக்கி, உப்பையும் உப உற்பத்திகளையும் உற்பத்தி செய்து உரிய முறையில் பதனிட்டு சந்தைப்படுத்தல் ஆகும்."

## 4.2 உற்பத்திப் பகுதி பற்றிய விபரங்கள்

### அ) மன்னார் உப்பளம்

மன்னார் உப்பளத்தில் மொத்தமாக 163 ஏக்கா் பகுதியில் உப்பு உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. வருடாந்தம் சராசரியாக 5500 மெற்றிக் தொன் உப்பு உற்பத்தி செய்யப்படுவதுடன், இது இலங்கையில் மேற்கொள்ளப்படும் மொத்த உப்பு உற்பத்தியில் 3.5% சத வீதமாகும். ஏதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் மன்னார் உப்பள அபிவிருத்தி வேலைகளுக்குப் பின்னா், மிக அண்மைக்காலத்தில் இந்த 3% சதவீத சந்தைப் பங்கானது 4% சதவீதமாக உயா்த்தப்படும்.

இது சுய நிதியிடும் மற்றும் இலாபமீட்டும் ஒரு நிறுவனமாகக் காணப்படுவதனால் அதன் அபிவிருத்தி செயற்பாடுகள், ஊழியர் சம்பளம் மற்றும் நலநோம்புகை என்பன இதன் இலாபத்தினூடாக நிருவகிக்கப்படுகின்றன. அத்துடன் பாரிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் முதலீட்டுச் செயற்பாடுகள் என்பன அரச மற்றும் ஏனைய நன்கொடையாளர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

### (ஆ) ஆனையிறவு உப்பளம்

அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின் பிரகாரம் 2001 ஆம் ஆண்டில் ஆனையிறவு உப்பளத்தின் நிருவாகம் வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனியின் கீழ் கொண்டுவரப்பட்டது. ஏதோ ஒரு வகையில் அப்போது ஆனையிறவுப் பகுதியில் காணப்பட்ட குழப்ப நிலை (ஆனையிறவுப் பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தமை) காரணமாக மாந்தை சோல்ட் நிறுவனத்தினால் இதனைத் தொழிற்படுத்த முடியவில்லை. 2009 ஆம் ஆண்டு இப்பகுதி விடுவிக்கப்பட்ட பின்னர் ஆனையிறவு உப்பளம் சிறிய மற்றும் பாரம்பரியக் கைத்தொழில்

அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு, அவர்கள் மூலம் 350 ஏக்கர் பகுதிகளில் சுமார் ரூபா 100 மில்லியன் பெறுமதியான புதுப்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதேவேளை 2016 ஆம் ஆண்டு 2 ஆம் கட்ட வேலைகளுக்காக அமைச்சரவை ரூபா 125 மில்லியனுக்கான அங்கீகாரத்தினை வழங்கியது. 2015 செப்டெம்பர் 21 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் தற்போது ஆனையிறவு உப்பளம் மீண்டும் வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனியின் நிருவாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. மாந்தை சோல்ட் நிறுவனம் தற்போது தனது 1 ஆம் கட்டக் கருத்திட்டத்தினை பூரணப்படுத்தும் நிலையில், 2 ஆம் கட்டத்தினை 2016 ஆம் ஆண்டில் தொடர்ந்துள்ளது. ஆனையிறவு உப்பளமானது வடக்கிலுள்ள மிகப்பெரிய உப்பளமாகும். ஆதிகரிக்கப்பட்ட பின்னர் மொத்தமாகவுள்ள 700 ஏக்கர் நிலப்பரப்பில் எதிர்காலத்தில் இந்த உப்பளத்தின் மூலம் வருடாந்தம் கிட்டத்தட்ட 20,000 மெற்றிக் தொன் உப்பினை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

### (இ) <u>செம்மணி உப்பளம்</u>

200 ஏக்கா் நிலப்பரப்புள்ள செம்மணி உப்பளத்தில் 80 ஹெக்டேயா் விஸ்தீரணமுள்ள பகுதி விளைச்சலுக்குரிய நிலப்பரப்பாகும். இங்கு காணப்படும் வழங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.கடந்த பல வருடங்களாக செம்மணி உப்பளத்தின் ஊழியர்கள் உற்பத்தி நடவடிக்கைகளில் தமது அதீத முயற்சியினை மேற்கொண்டுள்ளனர். ஆனால் மண் வளம் குறைவாகவுள்ளமை மற்றும் கடல் நீர் பற்றாக்குறை ஆகியவற்றினால் எதிர்பார்க்கப்படுமளவு உப்பு உற்பத்தி செய்யப்பட முடியாதுள்ளது, அத்துடன் இங்கு செய்யப்படும் உற்பத்திக்குரிய நீர் சுத்தமாகதாகக் கிடைப்பதில்லை.

கடந்த சில ஆண்டுகள் பார்க்கும் போது செம்மணி உப்பளம் நஷ்டத்திலே இயங்கி வருகிறது. இதனால் 2012 ஆண்டில் இவ் நிலத்தில் உற்பத்தி செய்யும் நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்போது இங்கு மீன் வளர்ப்புக் கருத்திட்டத்திற்காக அரச மற்றும் தனியார்த்துறை (PPP) பங்களிப்புடன் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

## 4.3 உற்பத்தி விபரங்கள்

| ஆண்டு | உற்பத்தி (மெற்றிக்தொன்) | | |
|---|---|---|---|
| | மன்னார் | செம்மணி | மொத்தம் |
| 2011/2012 | 4,147 | 135 | 4,282 |
| 2012/2013 | 4,527 | - | 4,527 |
| 2013/2014 | 4,653 | - | 4,653 |
| 2013/2014 | 6099.6 | - | 6099.6 |
| 2014/2015 | 5219.8 | - | 5219.8 |
| 2015/2016 | 3320 | - | 3320 |

## 4.4 விற்பனைகள்

| ஆண்டு | விற்பனை (மெற்றிக் தொன்) | வருமானம் (மில்லியன்) ரூபா |
|---|---|---|
| 2011/2012 | 4016 | 43.5 |
| 2012/2013 | 3801 | 38.9 |
| 2013/2014 | 4498 | 46.3 |
| 2014/2015 | 5176.1 | 49.0 |
| 2015/2016 | 5063 | 62.3 |



# 5. அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய அடிப்படைப் பகுதிகள்

## அ) <u>மன்னார் உப்பளம்</u>

1) தற்போது பயன்பாட்டிலுள்ள பளிங்கு உப்பு அயடீன் கலப்பு ஆலையானது யூ.என்.டீ.பி நிறுவனத்தினால் 2004 ஆம் ஆண்டு அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகும். இலங்கை தர நிருணய நிறுவகத்தின் கோரிக்கையின் பிரகாரம் புதிய இயந்திரமொன்றினை மாற்றீடு செய்யவேண்டியுள்ளது. இதன் அடிப்படையில் மணித்தியாலத்துக்கு 2 மெ. தொன் உப்பினை உற்பத்தி செய்யத்தக்க கொள்ளளவுடன் உலர்த்தி மற்றும் மைய நீக்கி ஆகியவற்றினையும் உள்ளடக்கிய புதிய ஆலைத் தொகுதியொன்றினைக் கொள்வனவு செய்வதற்கு இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

2) இக்கம்பனி இதன் உற்பத்திப் பகுதியின் அபிவிருத்தியினை உரிய முறையில் முகாமை செய்கின்ற போதிலும், இதன் நிருவாகக் கட்டிடத் தொகுதிக்கான உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்துகொள்வதில் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளது. இதன் தலைமை அலுவலகம் இன்னும் வாடகைக் கட்டிடத்திலேயே இயங்கி வருகின்றது. மன்னாரிலுள்ள அலுவலகக் கட்டிடம் 1950 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. இது தற்போது அழிவடையும் நிலையில் காணப்படுகின்றது. எனவே மன்னாரில் மாற்று அலுவலகக் கட்டிடமொன்றினை நிர்மாணிக்க வேண்டிய தேவையுள்ளது. மாந்தை சோல்ட் நிறுவனம் தனது நிருவாகக் கட்டிடத்தின் 1 ஆம் கட்டத்தினைப் பூர்த்தி செய்து கொள்ள ரூபா 12 மில்லியனை வழங்குமாறு கோரி நிதி அமைச்சிடம் பிரேரணையொன்றினை முன்வைத்துள்ளது.

3) பளிங்கு உப்பு ஆலை அபிவிருத்தி செய்யப்பட்ட பின்னர், 4500 மெற்றிக் தொன்னிலிருந்து 6000 மெற்றிக் தொன் வரையிலான உற்பத்தி இலக்கினைக் கொண்ட கருத்திட்டத்துடன் சந்தைப்படுத்தல் செயற்பாடுகள் விருத்தி செய்யப்படும். தற்போது இந்த சபை சந்தைப்படுத்தல் அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. எனவே இதன் மூலம் மன்னாரில் சந்தைப்படுத்தல் மற்றும் நிருவாகத் தேவைகளுக்காகப் பபயன்படுத்தும் பொருட்டு வாகனத்திற்கான அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது.

## ஆ) <u>ஆனையிறவு உப்பளம்</u>

1. 1 ஆம் கட்ட புதுப்பித்தல் மற்றும் மீளமைப்பு நடவடிக்கைகள் முடிவடைந்த நிலையில் 350 ஏக்கர் காணியில் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.
2. இன்னொரு 350 ஏக்கர் காணியில் உற்பத்தியினை ஆரம்பிப்பதற்கான 1 ஆம் கட்ட புதுப்பித்தல் மற்றும் மீளமைப்பு நடைபெறுகின்றது.
3. அலுவலக ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான தங்குமிட வசதிகள் மற்றும் அலுவலக வசதிகள் உட்கட்டமைப்பு அபிவிருத்தி.

## (இ) செம்மணி உப்பளம்

இங்கு மீன் வளர்ப்புக் கருத்திட்டத்திற்காக அரச மற்றும் தனியார்த்துறை பங்களிப்புடன் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

## 5.1 அபிவிருத்தி செயற்பாடுகள் மூலமான குறிப்பிடத்தக்க வெளியீடுகள்

- பளிங்கு உப்பு உற்பத்தி மற்றும் விற்பனை காரணமாக சந்தைப் பகுதிகளில் ஊடுருவுவதற்கும் விஸ்தரிப்பதற்கும் இது உதவியாக அமையும். அத்துடன் சந்தையில் இந்த கம்பனி தொடர்பான நம்பிக்கையினையும் உறுதிப்படுத்தும்.

- அதிகரித்த மற்றும் விரைவான விற்பனை காரணமாக சேமித்து வைத்தல் மற்றும் கையிருப்பில் வைத்தல் கால அளவு குறைவடையும்.

- நிறுவனத்தின் நிலையான தன்மை காரணாக தற்போதுள்ள ஊழியர்களின் தொழில் உறுதிப்படுத்தப்படுவதுடன், அதன் விஸ்தரிப்பு தேவைகளினை அடிப்படையாகக் கொண்டு மேலும் புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படும்.

- அதிகரிக்கின்ற இலாபத்தின் விளைவாக ஊழியர்களுக்கான நலநோம்புகை மற்றும் இலாபம் என்பன அதிகரிக்கும்.

- இலங்கை தரநிருணய நிறுவனத்தின் கோரிக்கை பூர்த்தி செய்யப்படுவதுடன் தொடர்ந்தும் தரம் பராமரிக்கப்படும்.

- கிராமப்புற சந்தைகளில் நியாயமான விலைக்கு கிடைக்கச் செய்வதன் மூலம் அயடீன் குறைபாட்டினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் நோய்களையும் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்ய முடியும்.

- ஆனையிறவிலுள்ள மீதி 350 ஏக்கர் நிலப்பரப்பிலும் புதுப்பித்தல் மற்றும் கள அலுவலகம், இயந்திர நிலையம் மற்றும் நீர் இறைக்கும் இயந்திர வீடு ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். 1 வது பெரிய பருவ காலத்தில் 6000 மெற்றிக் தொன் உப்பு அறுவடை செய்யப்படும்.

- சேம்மணி உப்பளத்தில் மீன் வளர்ப்புக் கருத்திட்டத்திற்காக அரச மற்றும் தனியார்த்துறை பங்களிப்புடன் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

- திறைசேரிக்கு குறிப்பிடத்தக்களவு ஈவுத் தொகை வழங்கப்படுவதுடன், பெறுமதி சேர் வரி (VAT) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பல் வரி (NBT) என்பன வழங்கப்படுவதனால் பொதுமக்களுக்கு பாரிய அனுகூலங்கள் கிடைக்கப்பெறும்.

# 6. நிதிசார் வெளிப்படுத்தல்கள்

| மார்ச் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்காக | அலகு | 2015/2016 | 2014/2015 | 2013/2014 | 2012/2013 | 2011/2012 |
|---|---|---|---|---|---|---|
| **உற்பத்தி** | மெ.தொ | 3320 | 5220 | 4653 | 4527 | 4282 |
| **விற்பனை** | மெ.தொ | 5063 | 5176 | 4498 | 3801 | 4016 |
| **வருமானம்** | ரூபா | 62,370,254 | 49,018,196 | 46,348,727 | 38,820,175 | 43,586,657 |
| **திரண்ட இலாபம்** | ரூபா | 13,190,129 | 18,346,244 | 12,067,352 | 13,315,888 | 14,276,589 |
| **தேறிய இலாபம்** | ரூபா | 275,429 | 1,608,820 | 7,372,990 | 499,230 | 3,876,691 |
| **தேறிய தொத்துக்கள்** | | | | | | |
| மொ. நடைமுறைச் தொத்து அல்லாதவை | ரூபா | 99,832,834 | 122,368,934 | 115,373,334 | 106,601,764 | 105,859,472 |
| மொ. நடைமுறைச் தொத்துக்கள் | ரூபா | 35,129,574 | 23,177,470 | 22,840,106 | 27,616,701 | 25,621,000 |
| குறைந்த – நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவை | ரூபா | (9,072,218) | (8,251,015) | (5,298,833) | (3,189,514) | (3,352,662) |
| குறைந்த – நடைமுறைப் பொறுப்புக்கள் | ரூபா | (16,398,968) | (5,216,776) | (1,605,556) | (7,092,891) | (8,820,338) |
| | | **109,491,222** | 132,078,612 | 131,309,051 | 123,936,060 | 119,307,472 |
| **பங்குதாரர்களின் நிதி** | | | | | | |
| வினியோகிக்கப்பட்ட பங்கு மூலதனம் | ரூபா | 30,000,000 | 30,000,000 | 30,000,000 | 30,000,000 | 30,000,000 |
| ஒதுக்கங்கள் | ரூபா | 79,491,222 | 79,476,932 | 101,309,051 | 93,936,060 | 89,307,472 |
| | | **109,491,222** | **132,078,612** | **131,309,051** | **123,936,060** | **119,307,472** |
| **அரசாங்கத்துக்கான வருவாய்** | | | | | | |
| வருமான வரி | ரூபா | 532,349 | 3,597,467 | 2,317,558 | - | - |
| **பங்கு ஒன்றிற்கான வருமானம்** | ரூபா | 1 | 5.36 | 24.58 | 1.66 | 12.92 |

# 7. அடிப்படை முகாமைத்துவ பதவியினர் பற்றிய விபரம்

| | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திரு. எம்.ஜே. துவான் மன்ஸில் | பொது முகமையாளர் |
| 02 | திரு. கித்சிரி சோமரத்ன | நிதி முகாமையாளர் |
| 03 | திரு. எஸ். டொகாலி | மன்னார் உப்பள முகாமையாளர் |
| 04 | திரு. ஏ.கி. ஷோதரன் | உதவி உற்பத்தி முகாமையபாளர் |
| 05 | திரு. எம்.எப். பைசால் | உதவி உற்பத்தி முகாமையபாளர் |
| 06 | திரு. கே.எம். சியாம் | ஆனையிறவு உப்பள முகாமையாளர் (ஒப்பந்தம்) |

# 8. நிறுவனம்சார் கட்டமைப்பு



## 8.1 மாந்தை சோல்ட் லிமிட்டெடில் தற்போதுள்ள பதவியினர்

| உத்தியோகத்தர்களின் பதவி | தலைமை அலுவலகம் | மன்னார் அலுவலகம் | ஆனையிறவு அலுவலகம் |
|---|---|---|---|
| பொது முகாமையாளர் | 01 | - | |
| நிதி முகாமையாளர் | 01 | - | |
| உப்பள முகாமையாளர் | - | 01 | 01 |
| உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் | 01 | - | |
| உப்பள உதவி முகாமையாளர் | - | 02 | |
| உப்பள உத்தியோகத்தர் | - | 01 | |
| களஞ்சிய பொறுப்பாளர் | - | 01 | |
| முகாமைத்துவ உதவியாளர் | 03 | 06 | |
| மேற்பார்வையாளர் | - | 01 | |
| சாரதி | 01 | 01 | |
| அலுவலக உதவியாளர் | 02 | 02 | |
| மின் இணைப்பாளர் | - | 01 | |
| இயந்திர இயக்குனர் | - | 03 | |
| பழுது பார்ப்பவர் | - | 01 | |
| சிவில் தொழில்நுட்பவியலாளர் | - | 01 | 02 |
| சிற்றூழியர் | - | 07 | |
| பாதுகாவலாளி | - | 04 | 02 |
| **மொத்த ஊழியர்கள்** | **09** | **32** | **05** |

# 9. பணிப்பாளர்களின் அறிக்கை

இக்கம்பனியின் பணிப்பாளர்கள் 2016 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையுடனும் வரவுக் கூற்றுடனும் தமது அறிக்கையினைச் சமர்ப்பித்துள்ளனர்.

## முக்கிய நடவடிக்கை

இவ்வாண்டில் இக்கம்பனியின் முக்கிய நடவடிக்கைகள் உப்பு தயாரித்தலும் விற்பனை செய்தலும் ஆகும்.

### நிதி பற்றிய விசேட குறிப்புக்கள்

2014 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டு.

| | |
|---|---|
| | **ரூபா** |
| **உப்பு விற்பனை** | |
| மன்னார் உப்பளம் | 62,370,254 |
| மொத்தப் புரள்வு | **62,370,254** |
| விற்பனைச் செலவு | (49,180,125) |
| **மொத்த இலாபம்** | **13,190,129** |
| **நிகர இலாபம் / (வரிக்குப் பின்னர்) காலத்திற்கான நிகர இலாபம்** | **275,429** |
| **பங்குகளுக்கான வருமானம்** | 1 |

## பணிப்பாளர்கள்

இந்த ஆண்டு காலப்பகுதியின் பணிப்பாளர்கள் பின்வருமாறு:

திரு. எம்.எம். அமீன் (தலைவர்) (2015.04.02 இலிருந்து)

திரு. ஏ.கே.எம். சிஹாப்டீன் (தொழிற்பாட்டுப் பணிப்பாளர்) (2015.04.02 - 2016.05.30)

திரு. பி.என்.யூ.பி. விஜேரத்ன (நிறைவேற்றுப் பணிப்பாளர்) (2015.06.01 - 2015.10.15)

திரு. கே. விஜிந்தன் (நிறைவேற்றுப் பணிப்பாளர்) (2015.03.13 - 2016.03.31)

திரு.பி.ஏ.எஸ்.ஏ. குமார (நிதி பணிப்பாளர்) (2015.03.01 இலிருந்து)

திரு. ஜே. மார்சலுஸ் பீரிஸ் (2015.04.02 இலிருந்து)

திரு. எம்.எம்.எம். உவைஸ் (2015.04.02 இலிருந்து)

திரு. எஸ். ஜயரத்ன (2015.06.19 இலிருந்து)

டாக்டர். எஸ். செல்வ மஹேந்திரன் (2015.04.27 இலிருந்து)

## பணிப்பாளர்களின் பங்குகள்

பணிப்பாளர்கள் எவரும் இக் கம்பனியில் எந்த வித பங்குகளையும் கொண்டிருக்கவில்லை.

## இந்த ஒப்பத்தங்களில் பணிப்பாளர்களின் ஈடுபாடு

கம்பனியுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவித ஈடுபாட்டையும் காட்டவில்லை.

## கணக்காய்வாளர்கள்

2014/2015 ஆம் ஆண்டுக்கான கம்பனியின் தற்போதைய கணக்காய்வாளர் இலங்கை கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்.

**இந்த பணிப்பாளர் சபையின் ஆணைப்படி,**

**கம்பனி செயலாளர்**

# மாந்தை சோல்ட் லிமிட்டெட்டின் பங்குதார்களுக்கான சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

NNP/MN/A/CD/MSL/2015-16 2018 ஜனவரி 12

மாந்தை சோல்ட் லிமிட்டட் நிறுவனத்தின்
பங்குதாரர்களுக்கு,

## 2016 மார்ச் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான மாந்தை சோல்ட் நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் அறிக்கை

நாம் மாந்தை சோல்ட் லிமிட்டெட்டின் (''கம்பனியின்'') 2016 மார்ச் 31 வரையுள்ள நிதி நிலைமைக் கூற்றுக்களை கணக்காய்வு செய்ததுடன் வருமானம் தொடர்புடைய கூற்றுக்கள், தேறுமதி மாற்றங்களின் கூற்றுக்கள் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள், அவ்வருட முடிவில் வரும் சாதாரண பங்குகளின் மாற்றங்களுடன் கணக்கியல் கொள்கைகளையும் அது பற்றிய குறிப்புகளையும் கணக்காய்வு செய்தோம். அத்துடன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த கணக்கீட்டுக் கொள்கையினதும் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தப்பட்ட தகவல்களினதும் சுருக்கம் எனது நேரடி கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவ சபையின் பொறுப்புக்கள்

முகாமைத்துவ சபை (“சபை”) உண்மைத் தன்மை மற்றும் நேர்மையினைக் கொண்ட ஸ்ரீலங்கா கணக்காய்வு தரத்திற்கமைய இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்குமான கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. இக்கடப்பாடு வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் தயாரிப்புடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்படுத்தலைப் பராமரித்தல் மற்றும் ஒன்றில் மோசடி அல்லது தவறுடைய பொருள்சார் தவறறிக்கைகளிலிருந்து விலகி நிதிக் கூற்றுக்களை நியாயமாக முன்னிலைப்படுத்தல். பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து நடைமுறைப்படுத்தல் மற்றும் இந்த நிலைமைகளில் நியாயமான கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

## கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

எங்களுடைய கணக்காய்வினை அடிப்படையாகக் கொண்ட இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்துவதே எமது கடப்பாடாகும். நாம் இந்நிதிக் கூற்றுக்கள் தவறுகளிலிருந்து விடுபட்டதென அறிவதற்கு நியாயமானதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதுமான கணக்காய்வை திட்டமிட்டு ஸ்ரீலங்கா கணக்காய்வுத் தரத்திற்கேற்ப நடத்தினோம்.

கணக்காய்வானது நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பரிசோதிப்பு தொகையை அறிவதற்குரிய ஆதாரங்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட நிதிக் கூற்றுக்களுக்குரிய இணைப்புக்கள் பாவிக்கப்பட்டுள்ள நிதிக் கொள்கைகளை மதிப்பிடல் மற்றும் இயக்குநர்களினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான விலைமதிப்பீடு நிதிக் கூற்றுக்களை மேலோட்டமாகக் கணக்கீடு செய்தல் கூறப்பட்ட நிதிக் கூற்றுக்கள் ஸ்ரீலங்கா கணக்காய்வு தரத்திற்கமைய உருவாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பவற்றைத் தீர்மானித்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

நாம் கணக்காய்வுக்குத் தேவையான தகவல்களையும் விபரங்களையும் எங்கள் உயரிய அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அமைய பெற்றுக் கொண்டோம். ஆகையால் எங்கள் கணக்காய்வானது ஏற்றுக்கொள்ளத்தக்க அடிப்படையை வழங்கியுள்ளதென நாம் நம்புகிறோம்.

## பொருத்தமான கருத்துக்கான அடிப்படை

(அ) 2016 ஆம் ஆண்டின் மார்ச் 31 ஆம் தேதி ரூபா. 358,007 மில்லியன் பெறுமதியான 30 மெட்ரிக் டொன் உப்பு இறுதி இருப்பு விற்பனை செய்யப்பட்டது, ஆனால் கணக்கியல் காலத்தில் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்படவில்லை. எனவே, மொத்த மற்றும் மதிப்பீட்டு ஆண்டுக்கான இலாபமானது 2016 மார்ச் 31 ஆம் தேதி சமமாக அதிகரித்துள்ளது.

(ஆ) மதிப்பீட்டு ஆண்டுக்கான நிலையான வைப்புகளின் மீதான வட்டி வருமானம் தவறாகக் ககணக்கிடப்பட்டதால், இது 131,735 ரூபாவால் குறைக்கப்பட்டது. இதன் விளைவாக, வருடத்தின் இலாபத்திற்கான வருவாயானது இதே அளவிற்கு குறைந்துவிட்டது.

(இ) ஆனையிறவு உப்பளத்தில் புதிய தொழிற்சாலை (சோல்ட் பீல்ட்) அமைப்பதற்கான ஆரம்ப செலவினம் ரூபா 2,693,074 சொத்தொன்றாக அடையாளப்படுத்தப்படுவதற்கு பதிலாக மீளாய்வாண்டு காலப்பகுதி வருமானத்தில் மாற்றத்த ஏற்படுத்தியிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டு காலப்பகுதி இலாபம் வீழ்ச்சியடைந்துள்ளது.

## <u>பொருத்தமான கருத்து</u>

எங்கள் அபிப்பிராயப்படி எமது கவனிப்புகளும் கருத்துகளிலும் குறிப்பிட்ட விடயங்கள் தவிர, இதுவரைக்கும் இக்கம்பனியானது 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கு ஒழுங்கான கணக்குப் புத்தகங்களைப் பாவித்துள்ளது என்பது எமது பரீட்சிப்பில் தென்படுகிறது. தொடர்புடைய கூற்றுக்களும், காசுப் பாய்ச்சலும் மற்றும் மூலதன மாற்றங்களும், கணக்கியல் கொள்கைகளும் அதற்குரிய குறிப்புக்களும் ஸ்ரீலங்கா கணக்கியல் தரத்திற்கமைய தயாரிக்கப்பட்டு கம்பனியின் நிலைமை மற்றும் அதன் இலாபம் மற்றும் காசுப் பாய்ச்சல் குறித்த உண்மையான ஏற்றுக்கொள்ளத்தக்க பார்வையை வழங்குகிறது.

அ) கணக்காய்வினுடைய அபிப்பிராயம், நோக்கெல்லை மற்றும் மட்டுப்படுத்தல்கள் ஆகியவற்றின் அடிப்படை மேலே குறிப்பிடப்பட்ட வகையில் அமையும்.

ஆ) எனது அபிப்பிராயம்:

- கணக்காய்வினை மேற்கொள்வதற்கு மற்றும் எமது பரிசோதிப்பினை மேற்கொள்வதற்கு தேவைப்பட்ட பொருத்தமான கணக்கீட்டுப் பதிவுகள், அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்கள் கம்பனியால் வழங்னப்பட்டன.
- இந்த கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்படுத்தல்களுடன் இணங்கிச் செல்கின்றது.

## பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

அரசியலமைப்பின் 154 (6) பிரிவின் விதிகளின் படி நான் பாராளுமன்றத்திற்கு என் அறிக்கையை சமர்ப்பிப்பேன்.

டபிள்யூ.பி.சி. விக்ரமரத்ன

மேலதிக கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகத்திற்காக

# கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் 2015/2016

# மாந்தை சோல்ட் லிமிட்டெட்

## 2016 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான நிதிக் கூற்று

| | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| வருமானம் | (3) | 62,370,254 | 49,018,196 |
| உற்பத்தி செலவு | | ( 49,180,125 ) | (27,823,204) |
| **தேறிய இலாபம்** | | 13,190,129 | 21,194,992 |
| ஏனைய தொழிற்பாட்டு வரவு | (4) | 7,279,268 | 2,623,394 |
| | | 20,469,397 | 23,818,386 |
| நிர்வாகச் செலவு | | ( 14,113,380 ) | (15,618,272) |
| விற்பனை மற்றும் வினியோகச் செலவு | | ( 518,904 ) | (122,000) |
| தொழிற்பாட்டிலிருந்து பெற்ற இலாபம் | | 5,837,112 | 8,078,114 |
| உப்பள புனரமைப்புச் செலவினம் | | ( 5,000,000 ) | - |
| நிதிச் செலவு | (5) | ( 29,335 ) | (23,080) |
| வருமான வரிக்கு முன் இலாபம் | (6) | 807,778 | 8,055,034 |
| வருமான வரிச்செலவு | (7) | ( 532,349 ) | (3,597,467) |
| வரிக்குப் பின்னரான ஆண்டிற்கான இலாபம் | | 275,429 | 4,457,567 |

## மாந்தை சோல்ட் லிமிட்டெட்

## 2016 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலமைக் கூற்று

| | குறிப்பு | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நீண்டகாலச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களும் | (8) | 65,526,353 | 66,187,768 |
| நிதிச் சொத்துக்கள் | (9) | 34,306,481 | 33,579,486 |
| | | **99,832,834** | **99,767,254** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பொருட் பதிவேடு | (10) | 8,230,641 | 17,981,970 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | (11) | 6,064,721 | 5,006,650 |
| காசும் காசுக்கு நிகரானதும் | (12) | 20,834,212 | 188,850 |
| | | 35,129,574 | 23,177,470 |
| **மொத்த சொத்துக்கள்** | | **134,962,406** | **122,944,724** |
| **தேறுமதி மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கம்** | | | |
| அரச மூலதனம் | (13) | 30,000,000 | 30,000,000 |
| அரச மாணியம் | | 14,500,000 | 14,500,000 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கீடு | (14) | 64,991,222 | 64,976,932 |
| **மொத்த தேறுமதி** | | **109,491,222** | **109,476,932** |
| **நடைமுறைப் பொறுப்புகள் அல்லாதவை** | | | |
| பிற்போடப்பட்ட வரி பொறுப்புகள் | (15) | 2,896,829 | 3,037,973 |
| ஓய்வூதிய இலாப கடப்பாடு | (16) | 6,175,389 | 5,213,042 |
| | | 9,072,218 | 8,251,015 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வியாபாரமும் ஏனைய கொடுப்பனவுகளும் | (17) | 13,771,637 | 3,341,895 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | (18) | 2,366,192 | 1,874,882 |
| செலுத்த வேண்டிய பங்கிலாபம் 2014/2015 | | 261,139 | 0 |
| | | 16,398,968 | 5,216,777 |
| **மொத்த தேறுமதிகள், பொறுப்புக்கள்** | | 134,962,408 | 122,944,724 |

இந்த நிதிக்கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்படுத்தல்களுடன் இணங்கிச் செல்கின்றன.

**......................................** **....................................**

**நிதி முகாமையாளர்** **திகதி**

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்னிலைப் படுத்துவதற்கு பணிப்பாளர் சபை கடப்பாடுடையது.

பணிப்பாளர் சபை சார்பில் பணிப்பாளர் சபைக்காக ஒப்பமிடப்பட்டது:

| | | பெயர் | ஒப்பம் |
|---|---|---|---|
| பணிப்பாளர் | 1. | ...................................... | ............................... |
| பணிப்பாளர் | 2. | ...................................... | ............................... |

சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட திகதி .......................................................

## மாந்தை சோல்ட் லிமிட்டெட்

## 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேறுமதி மாற்றங்களின் கூற்று

| | அரச மூலதனம் ரூபா சதம் | மீள் மதிப்பீடு ஒதுக்கங்கள் ரூபா சதம் | வருமான ஒதுக்கங்கள் ரூபா சதம் | மொத்தம் ரூபா சதம் |
|---|---|---|---|---|
| 2014 எப்ரல் 01 இல் மிகுதி | 30,000,000 | 14,500,000 | 61,358,623 | 105,858,623 |
| ஆண்டுக்கான நிகர இலாபம் | - | - | 4,457,567 | 4,457,567 |
| அரச முதலீட்டுப் பங்களிப்பு | - | - | (839,258) | 4,129,359 |
| **2015 மார்ச் 31 இல் மிகுதி** | 30,000,000 | 14,500,000 | 519,815,456 | 109,476,932 |
| ஆண்டுக்கான நிகர இலாபம் | - | - | 275, 429 | 275, 429 |
| பங்கிலாபம் 2014 / 2015 | - | - | (261,138) | (261,138) |
| **2016 மார்ச் 31 இல் மிகுதி** | 30,000,000 | 14,500,000 | 64,991,222 | 109,491,222 |

## மாந்தை சோல்ட் லிமிட்டெட்

## 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப் பாய்ச்சல் கூற்று

| | 2016<br>ரூபா | 2015<br>ரூபா |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து நிதிப் பாய்ச்சல்** | | |
| தொழிற்பாட்டு இலாபம் / (நட்டம்) வரிக்கு முன் | **807,778** | **5,206,287** |
| **சரி செய்தல்** | | |
| தேய்மானம் | **1,509,506** | **1,485,640** |
| தவணை முறை நீக்கம | **-** | **3,376,540** |
| பணிக்கொடை ஏற்பாடு | **962,347** | **1,403,138** |
| வருமதி வருமானவரி வருகை தள்ளுபடி செய்தல் | **-** | **1,185,234** |
| வருமதி VAT வருமான வரி தள்ளுபடி செய்தல் | **-** | **3,348,681** |
| நிலையான வைப்பு வட்டி வருமானம் | **(1,864,109)** | **(1,598,825)** |
| | **607,745** | **9,200,409** |
| **தொழிற்பாட்டு மூலதனங்களின் மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்பாட்டு இலாபம்** | **1,415,523** | **14,406,960** |
| **தொழிற்பாட்டு மூலதனங்களின் மாற்றம்** | | |
| பொருட் பட்டியலின் குறைவு/ (அதிகரிப்பு) | **9,751,328** | **(4,196,960)** |
| வியாபார ஏனைய வருமதியினதும் குறைவு/ (அதிகரிப்பு) | **(1,058,071)** | **(1,281,593)** |
| வியாபார ஏனைய கொடுப்பனவின் குறைவு/ (அதிகரிப்பு) | **10,429,742** | **551,105** |
| | **19,123,000** | **(4,927,448)** |
| | **20,538,521** | **9,479,247** |
| **நடவடிக்கைகளிலிருந்து பண ஆக்கம்** | | |
| பங்கிலாபக் கொடுப்பனவு | **-** | **(8,392,580)** |
| போனஸ் கொடுப்பனவு | **-** | **(879,687)** |
| பொருளாதார சேவை கட்டணம் கொடுப்பனவு | **(182,183)** | **(173,542)** |
| | **(182,183)** | **(1,892,487)** |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து நிகர காசுப் பாய்ச்சல்** | **20,356,339** | **7,586,760** |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | **(848,090)** | **807,618** |
| உப்பள புனர் நிர்மாண செலவு | **(5,000,000)** | |
| மூலதன மீளல | **-** | **9,316,701** |

| | | |
|---|---|---|
| நிலையான வைப்பு மிதான முதலீடு | **(726,995)** | **(21,360,114)** |
| நிலையான வைப்பு வட்டி வருமானம் | **1,864,109** | **1,585,825** |
| காணி அபிவிருத்தி வேலைக்கான செலவு | **-** | **(527,792)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து நிகர காசுப் பாய்ச்சல்** | **(4,710,977)** | **(10,164,762)** |
| **நிதியீட்டல் நடவடிக்கைகளிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| **அரச மானிய பெறுகை** | **5,000,000** | **-** |
| **நிதியீட்டல் நடவடிக்கைகளில் இருந்து நிகர காசுப் பாய்ச்சல்** | **5,000,000** | **-** |
| **இந்த ஆண்டு காலப்பகுதியில் காசினதும் காசுக்கு நிகரானவற்றினதும் நிகர அதிகரிப்பு** | **20,645,362** | **(2,578,003)** |
| இந்த ஆண்டு காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு நிகரானவையும் | **188,850** | **2,766,853** |
| இந்த ஆண்டு காலப்பகுதியின் முடிவில் காசும் காசுக்கு நிகரானவையும் | **20,834,212** | **188,850** |

**<u>இவ்வாண்டு காலப்பகுதியின் முடிவில் காசும் காசுக்கு நிகரானவையும் பற்றிய பகுப்பாய்வு</u>**

| | | |
|---|---|---|
| வங்கியிலுள்ள காசு | **20,834,212** | **186,850** |
| கையிலுள்ள காசு | | **2,000** |
| | **20,834,212** | **186,850** |

## மாந்தை சோல்ட் லிமிடெட்

## 2016 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக் குறிப்புக்கள்

### 1. நிறுவனம்சார் தகவல்கள்

### 1.1 அறிக்கையிடல்

மாந்தை சோல்ட் லிமிட்டெட் இலங்கையில் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் வரும் (முற்றுமுழுதாக அரசுக்குச் சொந்தமான) மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட கம்பனியாகும். இந்த கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் 21, 2/1 ஈ.எஸ். பெனாண்டோ மாவத்த, கொழும்பு 06 என்ற முகவரியில் அமைந்துள்ளதுடன், இதன் தலைமை வியாபாரத் தளம் பெரிய கடை மன்னாரில் அமைந்துள்ளது.

### 1.2 அடிப்படை செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

இவ்வாண்டு காலப்பகுதியில், இக்கம்பனியின் அடிப்படை செயற்பாடுகள் இலங்கையின் உப்பு உற்பத்தி வரலாற்றில் நீண்ட வரலாற்றினைக் கொண்டதாக அமைந்தது. இது இலங்கையில் சாதாரண உப்பு, அயடீன் இடப்பட்ட உப்பு, நொறுக்கப்பட்ட உப்பு மற்றும் கைத்தொழில் உப்பு என்பவற்றினை உற்பத்தி செய்கின்றது.

**1.3** (05) ஆம் மற்றும் (25) ஆம் பக்கம் வரையில் நிதிக்கூற்றுக்களின் பொறுப்புக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக் குறிப்புகளை நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதியாக உருவாக்குதல்.

**1.4** இவ்வாண்டு (2015) நிறைவடையும் போது ஊழியர்களின் எண்ணிக்கை 41 ஆகக் காணப்பட்டது.

## 2. முக்கியமான கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம்

### 2.1 பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.1.1 உடன்பாட்டு அறிக்கை

நிதியியல் கூற்றுகளின் நிலை விசாலமான வருமானத்தின் கூற்று மாற்றியமைக்கப்பட்ட நேர்மையான காசுப்பாச்சல் சேர்த்துக்கொள்ளப்படும் கணக்கின் கொள்கைகளும் குறிப்புகளுமாகும். நிதியியல் கூற்று 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்படுத்தல் மற்றும் இலங்கை கணக்கீட்டுத் தராதரங்களுக்கமைய இலங்கை பட்டைய கணக்காளர்களால் தயாரிக்கப்படுகின்றது.

## மாந்தை சோல்ட் லிமிடெட்

## 2016 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக் குறிப்புக்கள்

### 2.1.2 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பின் அடிப்படை

இந்த நிதிக்கூற்றறுக்கள் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக்காக இலங்கையின் கணக்கியல் அடிப்படை தரத்திற்கு அமைய பட்டைய கணக்காய்வாளர்கள் கூற்றுக்களாக தயாரிக்கப்படுகின்றது. இத்தகைய நிதிக்கூற்றுக்கள் இலங்கை நாணய அலகு (ரூபா) அடிப்படையில் முன்னிலைப்படுத்தப்படுவதுடன் அனைத்து நிதி சார் தகவல்களும் கிட்டடிய இலங்கை ரூபாய்க்கு மட்டந்தட்டப்பட்டு தாயரிக்கப்ட்டு சமர்ப்பிக்கப்படுகின்றன.

இந்த கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் முன்னய செலவு அடிப்படையினைக் கருத்திற்கொண்டு தயாரித்து சமர்ப்பிக்கப்படுகின்றன.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படும் தகவல்கள் வகைப்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்படுவதற்காக கம்பனியினால் கணக்கீட்டுக் கொள்கைகள் பிரையோகிக்கப்படுகின்றன. இந்த கம்பனியின் நடவடிக்கைளைத் தொடர்வதற்கான இயலுமை தொடர்பாக பணிப்பாளர்கள் மதிப்பீடொன்றினை மேற்கொள்கின்றனர்.

### 2.1.3 முக்கிய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகள்

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் சொத்துக்களின் அறிக்கையிடப்பட்ட தொகைகள், வருமானம் மற்றும் செலவினம் கியவற்றின் பிரையோகத்தினைப் பாதிக்கின்றவற்றினை மதிப்பிடு, தீர்ப்புச் செய்வதல் மற்றும் ஏற்றுக்கொள்ளலுக்காக இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கிச் செல்லும் வகையில் நிதிக் கூற்றுக்களை தாயாரிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. உண்மையான பெறுபேறு மதிப்பீடுகளிலிருந்த வேறுபட முடியும்.

மதிப்பீடுகள் மற்றும் ஏற்றுக்கொள்ளல்கள் என்பன வரலாற்று அனுபவம் மற்றும் சில சமயங்களில் நியாயபூர்வமாக இருப்பதற்கு நம்பப்படும் எதிர்கால நிகழ்வுகளின் எதிர்பார்ப்புக்கள் உள்ளடங்கலான ஏனைய பல காரணிகள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டவை.

மதிப்பீடுகள் மற்றும் ஏற்றுக்கொள்ளல்கள் என்பன தற்போதைய நிலைமையின் கீழ் மீளாய்வு செய்யப்பட்டன.

### 2.1.4 செய்பொருள் மற்றும் மொத்த மூலப்பொருள்

ஒவ்வொரு மூலப்பொருட்களுக்கு ஒப்பான இனங்களுக்காக கணக்கறிக்கையில் காட்டப்பட்டுள்ளது, இனங்களுக்கு ஒப்பற்ற இயற்றையான அல்லது இயல்முறையும் தனியாக காட்டப்படுதல் அற்பமானதல்ல.

### 2.1.5 அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகளின் செய்பொருள் கவனத்திற் கொள்ளப்பட்டு நிதிக் கூற்றுக்களில் தேவையான திருத்தங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## மாந்தை சோல்ட் லிமிடெட்

## 2016 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக் குறிப்புக்கள்

### 2.1.6 வரி விதிப்பு

**(அ) நடைமுறை வரிகள்**

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி ஏற்பாடுகளுக்கமைய அனுமதிக்கப்படாத பொருட்களுக்காக ஆண்டுக்காக சரி செய்யப்பட்ட வருமானத்தினை அடிப்படையாகக் கொண்ட சரியான வருமானத்தின் வரி சொத்துக்கள், மூலதனங்களின் சரியான கால அளவுகளின்படி வரி விதிப்பு மேற்கொள்ளப்படும்.

**(ஆ) ஒத்திவைக்கப்பட்ட வரி விதிப்பு**

ஒத்திவைக்கப்பட்ட வரி விதிப்பு மூலம் நிதி அறிக்ககையிடல் நோக்கம் மற்றும் வரி விதிப்பிற்கான நோக்கம் ஆகியவற்றிற்கான ஆதனத்தின் தொகை மற்றும் பொறுப்புக்களுக்கிடையிலான தற்காலிக வித்தியாசம் அடையப்படுகின்றது. ஒத்திவைக்கப்பட்ட வரி விதிப்பின் அளவீடானது அறிக்கையிடல் காலப்பகுதியின் நிறைவில் கம்பனி அதன் சொத்துக்களின் மற்றும் பொறுப்புக்களின் தொகையினை ஈடு செய்வதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு பின்பற்றும் பாங்கு முறையே வரி பலாபலன்களைப் பிரதிபலிக்கின்றது.

நடப்பு வரி பொறுப்புகள் மற்றும் சொத்துக்களை ஈடுசெய்ய சட்டப்பூர்வமாக செயல்படுத்தக்கூடிய உரிமை இருந்தால், ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஈடுசெய்யப்படுகின்றன. அதே வரி விதிப்பு நடவடிக்கை அதே வரி விதிப்பு நிறுவனத்தால் விதிக்கப்படும் வரிகள், அல்லது வெவ்வேறு வரி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அவை பொருந்தும். நிகர அடிப்படையில் தற்போதைய வரி பொறுப்புகள் மற்றும் சொத்துகள் அல்லது அவற்றின் வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஒரே நேரத்தில் உணரப்படும்.

ஒரு ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து என்பது பயன்படுத்தப்படாத வரி இழப்புக்களுக்கும், தற்காலிக வேறுபாடுகளை பயன்படுத்தக்கூடிய எதிர்கால வரிவிதிப்பு இலாபத்திற்கும் கிடைக்கக்கூடியதாக இருக்கும் என்று கருதப்படும் தற்காலிக வேறுபாடுகள். ஒவ்வொரு புகாரளிக்கும் நாளிலும் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அதனுடன் தொடர்புடைய நன்மை அடையப்படாது என்று கருதப்பட முடியாத அளவிற்கு குறைக்கப்படுகிறது.

தவறிய வரி சொத்துகள் மற்றும் பொறுப்புகள் வரி விகிதத்தில் அளவிடப்படுகிறது, அவை தற்காலிக வேறுபாடுகளை அவர்கள் திருப்புகையில் தாக்கல் செய்யும் போது, அவை வெளியிடப்பட்ட தேதி அல்லது கணிசமாக நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

### 2.1.7 கடனீட்டு செலவுகள்

கடனீட்டுக் காலப்பகுதியில் நிகழும் செலவினமே கடனீட்டுச் செலவு எனப்படுகின்றது.

### 2.2 சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படைகளும்

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டவை காசு மற்றும் கம்பனியின் வியாபார நடவடிக்கையின் சாதாரண தொழிற்பாட்டின் போது அல்லது அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்குள் காசாக ஆக்கிக் கொள்ள எதிர்பார்க்கப்படுபவை.

நிலையான சொத்துக்கள் என்பது கம்பனி அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்கும் அதிகமாக வைத்திருக்க உத்தேசிக்கும் சொத்துக்களாகும்.

பக்கம் (8)

## மாந்தை சோல்ட் லிமிடெட்

## 2016 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக் குறிப்புக்கள்

### 2.2.1 காசும் காசுக்கு நிகரானவையும்

காசும் காசுக்கு நிகரானவையும் என்பது கையிலுள்ள பணம் என வரைவிலக்கணம் வழங்கப்படுகின்றது, தேவைக்கு ஏற்ப முதலீடு செய்தலும் உயர் திரவத் தன்மை கொண்ட குறைந்த கால முதலீடுகள். காசுப் பாச்சலின் நோக்கம் காசும் அதற்கு சமனாக ஆக்கப்பட்ட கையிலுள்ள பணம், வைப்பிலுள்ள பணம் நிகர வங்கியின் அதிக பற்று, குறைந்த கால முதலீட்டின் முதிர்ச்சிகள் வேறுபலவும் மூன்று மாத அல்லது காலத்துக்கு ஏற்ற என்பனவாக வரையறுக்கப்பட்டுள்ளன.

### காசுப்பாச்சல் கூற்றுக்கள்

காசுப்பாய்ச்சல் கூற்று "நேரடி முறைமை" யினைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. வட்டி செலுத்துகை, வட்டி பெறுகை மற்றும் பங்கிலாப பெறுகை என்பன தொழிற்படும் காசுப்பாய்ச்சலாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதேநேரம் பங்கிலாப செலுத்துகையானது காசுப் பாய்ச்சல் கூற்று முன்னிலைப்படுத்தல் நோக்கத்தில் நிதியியல் காசுப்பாய்ச்சலாக வகைப்படுத்தப்படுகின்றது.

### 2.2.2 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களும்

உடமைகள் இயந்திர சாதனங்கள் என்பவற்றின் பெறுமதி, இன்று வரையுள்ள திரண்ட தேய்மானத்தை கழித்த பின்னர் உள்ள தொகையை காட்டுகின்றன.

